# 10 திருக்கூட்டச் சிறப்பு

**அறிமுகம்**

பன்னிரண்டாவது சைவத் திருமுறையாக அமைந்திருப்பது பெரியபுராணமாகும். இதனைப் பாடியவர் சேக்கிழார் சுவாமிகளாவார். அறுபத்திமூன்று தனியடியார்களதும் ஒன்பது தொகை அடியார்களதும் வரலாறும் சிறப்புகளும் பற்றி இந்நூல் கூறுகின்றது. மேலும் இரண்டு காண்டங்களையும் பதிமூன்று சருகங்களையும் 4287 விருத்தப் பாக்களையும் கொண்டுள்ளது.




பெரியபுராணத்தின் முதற் பகுதியாகிய திருமலைச் சருக்கத்தில் பாயிரம், திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு, தடுத்தாட்கொண்ட புராணம் என்ற ஆறு உட்பகுதியில் உள்ள பாடல்களையும் கொண்டுள்ளது.

திருக்கூட்டச் சிறப்பில் சைவ அடியார்களின் அளவற்ற பெருமைகள் விரித்துரைக்கப்பட்டுள்ளன. சைவ அடியார்கள் புறத் தூய்மையையும், அகத் தூய்மையையும், மிக்கவர்கள் என்றும் அன்னார் இன்ப துன்பங்களின் பாதிப்போ, பொன் பொருளில் நாட்டமோ இல்லாதவர்கள் என்றும் சேக்கிழார் பாடியுள்ளார். நாம் திருக்கூட்டச் சிறப்புப் பகுதியில் உள்ள பாடல்களையும் அதன் சிறப்புக்களையும் நோக்குவோம்.

*(1)* **பூதநாயகர் புற்றிடங் கொண்டவர்**
**ஆதி தேவர் அமர்ந்தப்பூங் கோயிலிற்**
**சோதி மாமணி நீள்சுடர் சூன்றில் சூழ்**
**மூதெ யில்திரு வாயில் முன் னாயது.**

பொருள் :

பூத கணங்களின் தலைவராயும், புற்றில் இடம்கொண்டு வீற்றிருப்பவராயும், ஆதிதேவராயும் உள்ள இறைவர் விரும்பி எழுந்தருளும் ''பூங்கோயில்'' எனும் கோயிலுள் விளக்கம் மிக்க பேரழகும் பேரொளியும் உள்ள திருமுற்றத்தில் மதிலின் வாயிலை அடுத்து முதலில் தேவாசிரியன் மண்டபம் உள்ளது.

(2) பூவார் திசை முன் இந்திரன் பூமிசை
மூவாழ் அகலத்து மால்முதல் வானவர்
ஓவா தெவரும் நிறைந்துறைந் துள்ளது
தேவா சிரியன் எனுந்திருக் காவனம்

*பொருள் : தாமரையில் வீற்றிருக்கும் நான்முகனும் இந்திரனும், திருமகளை தன் மார்பில் கொண்ட திருமால் முதலிய தேவர்களும் ஆகிய எல்லாரும் நீங்காமல் நிறைந்து வாழ்வதற்கு, இடமாக உள்ளது. அத்தேவாசிரியன் மண்டபம்.*

(3) ஆரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்தர நீற்றொளி யால்நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத் தோசை பொலிதலாய்ப்
புரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது

*பொருள் : உயிர்களின் துயரத்தைப் போக்கும் அடியவர்கள் திருமேனி மேல் ஒழுங்கு பெற அணிந்த திருநீற்றின் வெண்மையான ஒளியாலும், உயிர்களை காக்க வல்லதாய் அவர்கள் வாக்கில் எழும் ஐந்தெழுத்தின் - பஞ்சாட்சரத்தின் ஒளியானது எங்கும் பொருந்துவதாலும் பரந்த பல பாற்கடல்கள் ஒன்றாய் சேர்ந்துள்ளதைப் போல் அத்தேவாசிரியன் மண்டபம் விளங்குவதாகும்.*

(4) அகிலய காரனர் தாள்பணி வார்கள் தாம்
அகில லோகமும் ஆளற் குரியர் என்று
அகில லோகத்து ளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வே ததனிடை.

*பொருள் : எல்லா உலகங்களுக்கும் காரணமான சிவபெருமானின் திருவடிகளையே பற்றாகக் கொண்டு பனிவாய் இங்கு எழுந்தருளியிருக்கும் அடியார்களே, எல்லா உலகங்களையும் ஆளுதற்கு உரியார் என்ற காரணத்தால், எல்லா உலகங்களிலும் உள்ளவரும் அவர்களது ஆட்சிக்குள் அமைந்து வணங்க இங்கு வந்து சேர்கின்றன. ஆதலால் அத்தேவாசிரியனின் இடம் எல்லா உலகங்களையும் ஒன்றாய் சேர்ந்ததைப் போல் விளங்கியது.*

(5) அத்தர் வேண்டின் முன் ஆண்டவர் அன்பினால்
மெய்த்தக்க ழைத்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்தி ருத்தொண்டு செய்கடப் பாட்டினர்
இத்தி றத்தவர் அன்றியும் எண்ணிலார்.

*பொருள்: அங்குள்ள அடியார்கள் உலகத் தந்தையரான சிவபெருமானால் விரும்பி முன்னே ஆட்கொள்ளப்பெற்றவர்கள்: அன்பின் மிகுதியால் தம் மேனியில் மயிர்புலகம் உடல் நடுக்கமும் நிகழும் நெகிழ்வும் உடையவர்கள். தம் கடமையாய் கொண்டு கைத்தொண்டு செய்பவர்கள். இத்தன்மையுடையவர்களுடன் எண் இல்லாத*

அடியார்கள்.

(6) **மாசில்லாத மணிதிகழ் மேனிமேலு:**
**பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்**
**தேசி னால்எத் திசையும் விளக்கினார்**
**பேச ஒன்னாப் பெருமை பிறங்கினார்**

பொருள் : குற்றம் இல்லாத உருத்திராக்கம் பூண்ட தம் திருமேனியில் பூசிய திருநீற்றின் தூய்மைப் போலவே உள்ளேயும் புனிதத் தன்மை வாய்ந்தவர்கள். ஆதலால் அவர்கள் இவ்வளவு என்று வரையறை செய்து சொல்லால் சொல்ல முடியாத பெருமையில் விளங்குபவர்கள்.

(7) **பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும்**
**மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலார்**
**ஓது காதல் உறைப்பில் நெறிநின்றார்**
**கோதி லாத குனப்பெருங் குன்றனார்.**

பொருள் : அந்த அடியவர்கள் இறைவனது ஆணையின்படி நிலைபெற்ற ஐந்து பூதங்களும் தம் நிலையில் கலங்கிய போதும் நிலை கலங்காது உமை அம்மையை ஒரு பாகத்தில் கொண்ட சிவபெருமானின் தாமரை மலர் போன்ற திருவடிகளை தம் உள்ளத்தால் மறவாதவர்கள் பெரியவர்களால் எடுத்து ஓதப்பெற்ற அன்பிலே முளைத்த பக்தி வழியில் தவறாமல் நிற்பவர்கள், குற்றம் இல்லாத குணமலை போன்றவர்கள்.

(8) **கேடும் ஆக்கம் கெட்ட திருவினார்**
**ஓடுஞ் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்**
**கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி**
**வீடும் வேண்டா விரலின் விளங்கினார்**

பொருள் : அவ்வடியார்கள் குறைவதும் மிகுவதும் இல்லாத நிலைத்த செல்வத்தை உடையவர்கள் மண் ஓட்டையும் பசும் பொன்னையும் ஒன்றாகவே மதிப்பவர்கள் இறைவனை உள்ளத்தில் கூட்டி வைத்த அன்பு மேலீட்டினால் அவனை கும்பிடும் பிறப்பு ஒன்றே அல்லாது வீடு பேற்றையும் விரும்பாத வன்மை வாய்ந்தவர்கள்.

(9) **ஆரம் கண்டிகை ஆடையுங் கந்தையே**
**பாரம் ஈசன் பனிஅல தொன்றலார்**
**ஈர அன்பினர் யாதுங் குறைவிலார்**
**வீரம் என்னால் விளம்புந் தகையதோ**

பொருள் : அவ்வடியார்கள் ஆரமாக அணிவது உருத்திராக்க மாலையே. ஆடையாய் உடுப்பது கந்தல் ஆடையாகும். அவர் தாம் செய்யும் கடமையாய் தாங்கி நிற்பது இறைவனின் தொண்டையே அன்றி வேறொன்றும் இல்லாதவர்கள் அவர்கள்

அத்தகைய பணியில் தம்மைச் செலுத்தவல்ல குளிர்ந்த அன்பை உடையவர்கள். ஒன்றாலும் குறைவு இல்லாதவர்கள் இத்தகையவர்களின் வீரம் என்னால் அளவிட்டுச் சொல்லும் தன்மை உடையதோ உடையதன்று.

(10) **வேண்டுமாறு விருப்புறும் வேடத்தர்**
**தாண்ட வப்பெரு மான்தனித் தொண்டர்கள்**
**நீண்ட தொல்புக ழார்தம் நிலைமையை**
**ஈண்டு வாழ்த்துக்கேன் என்னறிந் தேத்துகேன்.**

பொருள் : அவர்கள் மேற்கொண்ட கோலமே அல்லது தாங்கள் வேண்டியவாறு மேற்கொள்வனவும், கண்டாரும் கேட்டாரும் விரும்பத்தக்கனவும் ஆகிய பலப்பல வேடங்களில் விளங்குபவர்கள், வேடத்தால் பலப்பல தோற்றத்தாராயினும் கூத்தப் பெருமானுக்கு ஆனாய் தனிப்பெருமையில் ஒன்று போல் விளங்குபவர்கள். ஆதலால் நீண்ட அளவற்ற புகழையுடையவர் ஆவார்கள் இக்கூட்டத்தில் உள்ளவர்கள் இத்தகையவரின் தொண்டின் நிலையை இப்புராணத்தில் எடுத்துக்கூறி வாழ்த்தப் புகும் யான் என்னவென்று அறிந்து ஏத்துவேன்.

(11) **இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்**
**ஆந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்**
**சுந்த ரத்திருத் தொண்டத் தொகைத்தமிழ்**
**வந்துப்பாடிய வனனம் உரை செய்வோம்.**

பொருள் : இந்த மாதவர் திருக்கூட்டத்தை எம் இறைவனான அளவற்ற புகழையுடைய ஆலால சுந்தரர் இந்த உலகில் வந்து அவதரித்து சுந்தரர் திருத்தொண்டர் தொகையைத் தமிழில் பாடிய வரலாற்றை உரைக்கின்றோம்.

## பயிற்சிகள்

1. திருக்கூட்டச் சிறப்பு என்றால் என்ன?
2. தேவாசிரியன் மண்டபம் எங்கே உள்ளது.
3. சிவனடியார்கள் எத்தகையவர்கள் எனச் சேக்கிழார் குறிப்பிடுகின்றார்?

## செயற்பாடுகள்

★ திருக்கூட்டச் சிறப்புப் பற்றி சேக்கிழார் கூறியவற்றினைத் தொகுத்து எழுதுக.
★ சிவனடியார் பெருமைபற்றி வகுப்பறையில் உரையாற்றவும்.

## பாடச்சுருக்கம்

- ✶ பெரிய புராணத்தின் முதற்பகுதியினை திருமலைச் சருக்கத்தில் ஒருபகுதியாகத் திருக்கூட்டச்சிறப்பு அமைந்துள்ளது.

- ✶ சிவபெருமான் வீற்றிருக்கும் திருகைலாய கோவிலின் முற்றலின் வாயிலில் தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ளது.

- ✶ தேவாசிரியன் மண்டபத்தில் உள்ள சிவனடியார்கள் பூசியுள்ள திருநீறும் திருவைந்தெழுத்து ஓதும் ஒலியும், பாற்கடலை நினைவுப்பூட்டுகின்றன.

- ✶ சிவனடியார் புறத்தேயும் அகத்தேயும் புனிதத்தன்மை வாய்ந்தவர்கள். அவர்கள் எந்நிலையிலும் தன்நிலை மாறாதவர்கள்.ஓடும் செம்பொன்னும் ஒக்கவே நோக்குபவர். கும்பிடலே அன்றி வீடும் வேண்டாதவர்.